Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 06, 2024

வியாழக்கிழமை ஜூன் 06, 2024 | ஒளி: 09 கதிர்: 267 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# ‘ஹிஜாப்பால் பெறுபேறு இரத்தாகாது”



### மேல் மாகாணத்தில் அதிபர் பரீட்சைக்கு தோற்றிய 13 பேர் ஹிஜாப் அணிந்த வண்ணம் தோற்றியுள்ளனர்

ஹிஜாப் அணிந்து பரீட்சைக்கு தோற்றியதால் பெறுபேறு இரத்து செய்யப்படமாட்டாது என தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

காதுகளை மறைத்த வண்ணம் ஹிஜாப் அணிந்திருக்கும் போது சூட்சமான முறையில் காதுக்குள் கருவிகளை வைத்திருக்க முடியும். இவ்வாறான நிலையில் தான் காதுகள் தென்படும் வகையில் அணியுமாறு குறிப்பிடப்படுகிறது என்றார். பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான முஜிபுர் ரஹ்மானினால் புதன்கிழமை (05) எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## A/L மீள் திருத்த விண்ணப்பம்

க.பொ.த உயர்தர (2023/2024) பரீட்சையின் விடைத்தாள்களை மீள் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பங்கள் ஜூன் 05 முதல் ஜூன் 19 வரை ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை ஒன்லைன் மூலம் மட்டுமே அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்கள் குறித்த பகுதியின் ஊடாக www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk விண்ணப்பிக்க முடியும்.



## நரேந்திர மோடிக்கு சபையில் வாழ்த்து

இந்தியாவில் மீண்டும் ஆட்சியமைக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கை பாராளுமன்றத்தில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.

பாராளுமன்றம் புதன்கிழமை (05) கூடிய போது, விசேட அறிவித்தலை வெளியிட்டு பிரதமர் தினேஸ் குணவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் இந்திய பிரதமருக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## மண்மேடு விழுந்ததில் சிறுவன் பலி



கேகாலை, மங்களகம, குருந்திய வராஹேன கிராமத்தில் வீடொன்றுக்கு அருகாமையில் மூன்றரை வயது சிறுவன் மீது மண்மேடு விழுந்ததில் அச்சிறுவன் உயிரிழந்துள்ளது.

வீட்டின் பின்புறத்தில் பாதுகாப்பான பக்கச்சுவர் அமைப்பதற்காக கரை வெட்டப்பட்டிருந்துள்ளது. அங்கு விளையாடிக் கொண்டிருந்த போதே அச்சிறுவனின் மீது மண்மேடு விழுந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அயலவர்களின் உதவியுடன் சிறுவனை மீட்டு கேகாலை போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## 1,5025 வீடுகளை அகற்ற நடவடிக்கை



மண்சரிவு அவதானம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள 1,5025 வீடுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான இடங்களில் உள்ளவர்களுக்கு அரசாங்கத்தால் வீடுகள் வழங்கப்பட்டுள்ள போதும் அவதானத்துக்குரிய இடங்களிலுள்ள வீடுகளில் இருந்து

தொடர்ச்சி P2

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில்

## “இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வேண்டும்”



ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், இதற்கு இலங்கை பாராளுமன்றத்தின் 225 பேரின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) இந்தியத் தேர்தலில் வெற்றிப்பெற்ற பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்து உரையாற்றும் போதே எதிரக்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

## “விசாரணைகளுக்குப் பின் பெறுபேறு வெளியிடப்படும்”

### இன,மொழி அடிப்படையில் பார்க்க முடியாது



பரீட்சை ஒழுங்கு விதிகளை மீறுவது பரீட்சை சட்டங்களை மீறுவதாகவே கருதப்படும். இதனை இன,மொழி அடிப்படையில் பார்க்க முடியாது எனத் தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் பரீட்சை பெறுபேறு இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில்

தொடர்ச்சி P2

## புலிகளுடன்15 குழுக்களின் சொத்துக்கள் முடக்கம்

இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 15 குழுக்கள், 210 தனி நபர்களின் சொத்துகள் முடக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் சார்ந்த நடவடிக்கைகளில் 15 குழுக்கள் மற்றும் 210 பேர் ஈடுபடுவதாகத் தெரியவந்துள்ளது. அதையடுத்து, அந்த அமைப்புகள் மற்றும் நபர்களுக்குச் சொந்தமான நிதி சொத்துகளும் பிற பொருளாதார ஆதாரங்களும் உரிய விதிமுறைகளின் கீழ் முடக்கப்படுகின்றன.

தொடர்ச்சி P2

## அடுத்த பரீட்சைகள் முறையாக நடக்கும்

க.பொ.த உயர் தரம் மற்றும் சாதாரணதரப் பரீட்சைகளை அடுத்த வருடம் முதல் அதற்குரிய காலமான ஓகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதங்களில் நடத்த முடியுமாக இருக்கும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) நடைபெற்ற கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## சிறுவனை மிக மோசமாக தாக்கியவரும் 2 பெண்களும் கைது

நான்கு வயது சிறுவன் மீது மனிதாபிமானமற்ற முறையில் கடுமையாக தாக்கிய சம்பவத்துடன் தேடப்பட்டு வந்த நபர், புல்மோடை-ஆசிரிமலை பகுதியில் வைத்து புதன்கிழமை (05) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாக்குதலை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டின் கீழ், 37,46 வயதான பெண்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மணலாறு (வெலிஓயா) -கல்யாணிபுரம் பகுதியைச் சேர்ந்த 45 வயதானவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான நான்கரை வயதுச் சிறுவனை பொலிஸார் தமது பொறுப்பின் கீழ் எடுத்து, சட்ட வைத்திய அதிகாரியின் முன் முன்னிலைப்படுத்தியுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த புல்மோடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

## சாஹிரா மாணவிகளுக்கு பாரபட்சம் இடம்பெற்றுள்ளதா?



திருகோணமாலை சாஹிரா கல்லூரியின் 70 மாணவிகளினதும் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட்டு அந்த மாணவிகளுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்ற மகளிர் வலுவூட்டல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஒரே குடும்பத்தை சேர்ந்த அறுவர் தஞ்சம்

எஸ்.ஆர்.லெம்பேட்

முல்லைத்தீவில் இருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த ஆறு பேர் ராமேஸ்வரத்தில் புதன்கிழமை(5) அதிகாலை தஞ்சமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவில் இருந்து மன்னாருக்கு செவ்வாய்க்கிழமை(4) சென்று மன்னாரில் இருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக படகில் புறப்பட்டு ராமேஸ்வரம் அடுத்த சேராங் கோட்டையை புதன்கிழமை(5) அதிகாலை சென்றடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## “கல்வி முறைமை பிரயோசனமற்றது”



இலங்கையின் தற்போதைய கல்வி முறைமை நாட்டுக்கோ, பிள்ளைகளுக்கோ பிரயோசனமற்றதாகவே இருக்கின்றது என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரட்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) நடைபெற்ற கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ரோஹினி குமாரி கவிரட்ன எம்.பி இவ்வாறு கூறினார். கொவிட் தொற்றுப் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமையால் பாதிக்கப்பட்ட கல்வித்துறை இன்னும் வழமைக்கு திரும்பவில்லை. குறித்த காலப்பகுதியில் பொதுப் பரீட்சைகளை நடத்த முடியாதிருந்தது.

தொடர்ச்சி P2

## பொது வேட்பாளருக்கு புளொட் ஆதரவு

எம்.றொசாந்த்

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை தாம் ஏற்றுக்கொண்டுள்ளோம் என ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘ஹிஜாப்பால் பெறுபேறு இரத்தாகாது”

முஜிபுர் ரஹ்மான் எம்.பி.கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்புகையில், அதிபர் சேவை பரீட்சைக்கு மேல் மாகாணத்தில் தோற்றிய 13 பேர் ஹிஜாப் அணிந்த வகையில் பரீட்சைக்கு தோற்றியதற்காக அவர்களின் பெறுபேறு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஹிஜாப் அணிந்த வகையில் தேசிய பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. பரீட்சார்த்தியின் காதுகள் தென்படும் வகையில் அவர் இருத்தல் வேண்டும் என பரீட்சை மத்திய நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டால் அதற்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அவரை பரீட்சை மண்டபத்தில் இருந்து வெளியேற்ற முடியும்.

மேல் மாகாணத்தில் அதிபர் பரீட்சைக்கு தோற்றிய 13 பேர் ஹிஜாப் அணிந்த வண்ணம் பரீட்சைக்கு தோற்றியதாக குறித்த பரீட்சை நிலையத்தின் அதிகாரிகள் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளனர். இதனை தொடர்ந்து இவர்களின் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆகவே இப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

இதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதிலளிக்கையில், ஹிஜாப் அணிந்து பரீட்சைக்கு தோற்றியதால் பெறுபேறு இரத்து செய்யப்படமாட்டாது. தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும் அதனை தொடர்ந்து பரீட்சை பெறுவேறு வெளியிடப்படும்.

காதுகளை மறைத்த வண்ணம் ஹிஜாப் அணிந்திருக்கும் போது சூட்சமான முறையில் காதுக்குள் கருவிகளை வைத்திருக்க முடியும். இவ்வாறான நிலையில் தான் காதுகள் தென்படும் வகையில் அணியுமாறு குறிப்பிடப்படுகிறது என்றார்.

# நரேந்திர மோடிக்கு சபையில் வாழ்த்து

அதன்போது பிரதமர் தினேஸ் குணவர்தன கூறுகையில், எமது அண்டை மற்றும் நட்பு நாடான இந்தியாவின் ஜனநாயக தேர்தலில் மூன்றாவது முறையாகவும் பிரதமராகும் பாரதிய ஜனதா கட்சியின் தலைவரான நரேந்திர மோடிக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம். பாராளுமன்ற ஜனநாயக முறையில் பெரும் சனத்தொகையை கொண்ட நாடாக இந்தியா இருக்கின்றது. அந்த நாட்டின் பிரதமராக மோடி செயற்படுகின்றார். ஆசியா நாடுகளுடனான நட்பு மற்றும் ஒத்துழைப்புடனும் இலங்கையுடனான ஒத்துழைப்புகளுக்கும் மோடி அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறுகையில், அடுத்தடுத்து மூன்றாவது முறையாகவும் பிரதமராக பதவியேற்கும் நரேந்திர மோடிக்கும், மீண்டும் ஆட்சியமைக்கும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணிக்கும் வாழ்த்துகளை கூறிக்கொள்கின்றோம். தொடர்ச்சியாக மக்கள் நம்பிக்கைகளை வென்று தொடர்ந்தும் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு எமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றோம். இலங்கை இந்தியா இடையே நெருக்கமான நட்பு இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகின்றோம் என்றார்.

# “விசாரணைகளுக்குப் பின் பெறுபேறு வெளியிடப்படும்”

விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வெகுவிரைவில் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) இடம்பெற்ற அமர்வின் போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான முஜிபுர் ரஹ்மானினால் எழுப்பப்பட்ட அதிபர் சேவை பரீட்சைக்கு மேல் மாகாணத்தில் தோற்றிய 13 பேர் ஹிஜாப் அணிந்த வகையில் பரீட்சைக்கு தோற்றியதற்காக அவர்களின் பெறுபேறு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஹிஜாப் அணிந்த வகையில் தேசிய பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. பரீட்சார்த்தியின் காதுகள் தென்படும் வகையில் அவர் இருத்தல் வேண்டும் என பரீட்சை மத்திய நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டால் அதற்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அவரை பரீட்சை மண்டபத்தில் இருந்து வெளியேற்ற முடியும்.

மேல் மாகாணத்தில் அதிபர் பரீட்சைக்கு தோற்றிய 13 பேர் ஹிஜாப் அணிந்த வண்ணம் பரீட்சைக்கு தோற்றியதாக குறித்த பரீட்சை நிலையத்தின் அதிகாரிகள் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளனர். இதனை தொடர்ந்து இவர்களின் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆகவே இப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டுமென்றார்.

முஸ்லிம் பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகள் ஹிஜாப் அணிந்த வண்ணம் பரீட்சைகளுக்கு தோற்றும் போது பல பிரச்சினைகளை எதிர்க்கொள்கிறார்கள். ஆகவே இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென

> **இந்த மாணவிகளின் பரீட்சை பெறுபேறு நிறுத்தப்படவில்லை இடைநிறுத்தப்பட்டுள்ளது விசாரணைகள் முடிந்த பின்னர் வெகுவிரைவில் பெறுபேறுகள் வெளியிடப்படும்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார்.

முஜிபூர் ரஹ்மான் எம்.பி. மேல்மாகணத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை சுட்டிக்காட்டினார். இவ்விடயம் குறித்து ஆராய்ந்து தகவல்களை பெற்றுள்ளேன்.

ஹிஜாப் அணிந்து பரீட்சைக்கு தோற்றியதால் பெறுபேறு இரத்து செய்யப்படமாட்டாது. தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும் அதனை தொடர்ந்து பரீட்சை பெறுபெறுகள் வெளியிடப்படும். காதுகளை மறைத்த வண்ணம் ஹிஜாப் அணிந்திருக்கும் போது சூட்சமான முறையில் காதுகளுக்குள் கருவிகளை வைத்திருக்க முடியும். இவ்வாறான நிலையில் தான் காதுகள் தென்படும் வகையில் அணியுமாறு குறிப்பிடப்படுகிறது

இதேவேளை இ தேபோனதொரு பிரச்சினை திருகோணமலை ஸாஹிரா கல்லூரி மாணவிகளுக்கும் ஏற்பட்டுள்ளது இந்த மாணவிகளின் பரீட்சை பெறுபேறு நிறுத்தப்படவில்லை இடைநிறுத்தப்பட்டுள்ளது விசாரணைகள் முடிந்த பின்னர் வெகுவிரைவில் பெறுபேறுகள் வெளியிடப்படும்.

பரீட்சை ஒழுங்கு விதிகளை மீறுவது பரீட்சை சட்டங்களை மீறுவதாகவே கருதப்படும். இதனை இன,மொழி அடிப்படையில் பார்க்க முடியாது என்றார்.

# புலிகளுடன் 15 குழுக்களின் சொத்துக்கள் முடக்கம்

சொத்துகள் முடக்கப்பட்ட குழுக்களில் விடுதலைப் புலிகள், தேசிய தவ்ஹாத் ஜமாத், ஜமாதி மிலாது இப்ராஹிம் ஆகிய அமைப்புகள் அடங்கும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் தேசிய தவ்ஹாத் ஜமாத் அமைப்பு கடந்த 2019-ஆம் ஆண்டு ஈஸ்டர் பண்டிகையின்போது தேவாலயங்களிலும் ஹோட்டல்களிலும் தற்கொலை குண்டுவெடிப்புத் தாக்குதல்களைநடத்தியது.

இது தவிர, தமிழர்கள் மறுவாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலக தமிழ் இயக்கம், நாடு கடந்த தமிழ் ஈழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதி ஆகியவற்றின் சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன.

# “கல்வி முறைமை பிரயோசனமற்றது”

கற்றல் நடவடிக்கைகளை சரியான காலத்தில் நிறைவு செய்ய முடியாமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இதனால் கஷ்டப் பிரதேச பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை கல்வித் துறையில் ஆசிரியர்கள் உள்ளிட்டோரின் சம்பளம் தொடர்பான முரன்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவற்றை தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகின்றோம்.

இந்நிலையில் தற்போதைய கல்வி முறைமை தற்போதைய பிள்ளைகளுக்கு பொருத்தமானதாகவும் இல்லை. இந்த முறைமையால் நாட்டுக்கோ, பிள்ளைகளுக்கோ, உலகத்திற்கோ எந்தப் பிரயோசனமும் இல்லை. பொருத்தமான சிறந்த கல்விமுறை இருக்குமாக இருந்தால் நாட்டின் பிள்ளைகள் இந்தளவுக்கு பிரச்சினைகளை எதிர்நோக்கமாட்டார்கள். உளவியல் ரீதியில் இதனால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றன. உலகில் மற்றைய நாடுகளில் எப்படி கல்வி முறைமை உள்ளது என்பதற்கு உதாரணங்கள் உள்ளன.

# சாஹிரா மாணவிகளுக்கு பாரபட்சம் இடம்பெற்றுள்ளதா?

திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலையொன்றின் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவரவில்லை என்ற ஆதங்கம் முஸ்லிம் மக்களிடமிருந்து வெளிவருகின்றது. முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களின் கவலைகளை இங்கே வெளிப்படுத்தியுள்ளனர். திருகோணமலை சாஹிரா கல்லூரியில் இருந்து பரீட்சைக்கு தோற்றிய 70 மாணவிகளின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் மிகவும் கவலைக்குரியது.

அந்த பிள்ளைகள் பல கனவுகளுடன் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இந்நிலையயில் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை அவர்களுக்கு ஏமாற்றத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தும். ஆகவே, இந்த விடயத்தில் இனம், மதம் தொடர்பில் பாரபட்சம் இடம்பெற்றுள்ளதா? என ஆராயப்பட வேண்டும். அது தொடர்பில் மாணவிகளுக்கு நீதி உடனடியாக வழங்கப்பட வேண்டும். அந்த மாணவிகளின் பெறுபேறுகள் உடனடியாக வெளியிடப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றேன் என்றார்.

# அடுத்த பரீட்சைகள் முறையாக நடக்கும்

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், கொவிட் நிலைமை, ஆசிரியர்களின் போராட்டம் மற்றும் அரகலய போராட்டத்தினால் கல்வித்துறை பெரிதும் பாதிக்கப்பட்டது.

அதனால் க.பொ.த சாதாரண தர, உயர்தர மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளை குறித்த காலத்தில் நடத்த முடியாது போனது. பாடசாலை கால அட்டவணையிலும் பிரச்சினைகள் ஏற்பட்டன. ஆசிரியர் ஆட் சேர்ப்புகளும் நிறுத்தப்பட்டிருந்தன.

பரீட்சை நேர அட்டவணைகளை சரியான காலத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த வருடத்தில் நாங்கள் இரண்டு உயர்தரப் பரீட்சைகளை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்படி 2025ஆம் ஆண்டளவில் உயர்தரப் பரீட்சையை ஒகஸ்டில் நடத்த முடியுமாக இருக்கும். சாதாரண தரப் பரீட்சையை 2025 டிசெம்பரில் சரியான காலத்தில் நடத்த முடியுமாக இருக்கும் என்றார்.

# ஒரே குடும்பத்தை சேர்ந்த அறுவர் தஞ்சம்

தாய் தந்தை மற்றும் நான்கு பிள்ளைகள் உள்ளடங்களாக 6 பேர் இவ்வாறு தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கை தமிழர்கள் ஆறு பேரையும் மீட்ட மரைன் பொலிஸார் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# 1,5025 வீடுகளை அகற்ற நடவடிக்கை

வெளியேறாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் பாதிப்பு தொடர்பில் அரச தரப்பு எம்பி. அகில சாலிய எல்லாவெல பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைத்தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலையால் இதுவரையான மதிப்பீடுகளுக்கு அமைய 71 வீடுகள் முழுமையாகவும், 9378 வீடுகள் பகுதியளவிலும், 825 சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறை மத்திய நிலையங்கள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஆகிய அனர்த்தங்களினால் இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர். இடர்களுக்கு உள்ளான 3261 குடும்பங்களைச் சேர்ந்த 113,028 பேர் 165 தற்காலிக பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதிகளில் வீடுகளின் மேல் மாடிகளில் பாதுகாப்பாக உள்ளவர்களுக்கு தற்காலிக முகாம்கள் ஊடாக உலர் உணவுகள் வழங்கப்படுகின்றன என்றார்.

# “இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வேண்டும்”

அதன்போது எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறுகையில்,

அடுத்தடுத்து மூன்றாவது முறையாகவும் பிரதமராக பதவியேற்கும் நரேந்திர மோடிக்கும், மீண்டும் ஆட்சியமைக்கும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணிக்கும் வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றோம். இலங்கை இந்தியா இடையே நெருக்கமான நட்பு இருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இதனால் உலகில் அதிகளவான சனத்தொகையை கொண்ட இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமை வழங்கப்படுவது முக்கியமாகும். குறிப்பாக உலகளாவிய அதிகார கேந்திரநிலையமாக உள்ள இந்தியாவுக்கு ஐநா பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமையை வழங்குவது உண்மையிலேயே செயற்படுத்தப்பட வேண்டியதே இந்த பாராளுமன்றத்தின் 225 பேரின் ஒத்துழைப்பும் கிடைக்கும். இதனால் இந்த யோசனையை நான் முன்வைக்கின்றேன்.

பிரதமர் மோடி இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் அதிகளவான பிரதிநிதித்துவத்தை வென்று அடுத்தடுத்து ஆட்சியை பெற்றுக்கொண்டுள்ளார். இது இலகுவானது அல்ல. வரலாற்று நிகழ்வாகும். இதனால் பிரதமர் மோடியிடம் இருந்து நாங்கள் அனுபவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த போது மக்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டு அனைவருக்கும் சௌபாக்கியம் என்ற அடிப்படையில் பொருளாதாரத்தை உயர்தியுள்ளார் இதன்படி அவருக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம் என்றார்.

# பொது வேட்பாளருக்கு புளொட் ஆதரவு

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த.சித்தார்த்தன் தலைமையில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும், சமூக வாழ்வின் எதிர்பார்ப்புகளையும், நாளாந்தம் முகம் கொடுத்துவரும் நெருக்கடிகளையும், தென்னிலங்கை அரசியல் சமூகத்தின் தொடர்ச்சியான ஏமாற்றுத்தனங்களையும் உறுதியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில், ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினராகிய நாம் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து ஏற்றுக் கொண்டதோடு அதனை முன்கொண்டு செல்வதற்கான முழு ஆதரவினையும் வெளிப்படுத்தியிருந்தோம்.

அதே நேரத்தில், இத் தீர்மானத்தை ஒரு சில அரசியல் கட்சிகளினதும், ஒரு சில சமூக செயற்பாட்டுக் குழுக்களினதும் தீர்மானமாகவன்றி, தமிழ் தேசியப் பரப்பில் இயங்கும் அனைத்துத் தரப்பினரதும் ஏகோபித்த கோரிக்கையாக முன்னெடுப்பதன் மூலம், தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்மானங்களை மிகவும் காத்திரமான முறையில் வலுமிக்கதான முன்னெடுக்க முடியும் என்பதையும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

> **முன்கொண்டு செல்வதற்கும், அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கும் தீர்மானம்**

தமிழ்ப் பொது வேட்பாளர் கோரிக்கை பேசுபொருளாக ஆரம்பித்த காலத்தைவிட இன்றைய காலகட்டத்தில், பல்வேறு தரப்பினரது அயராத முயற்சிகளால், அக் கோரிக்கையின் ஆதரவுத் தளம் அதிகரித்து வருவதோடு கோரிக்கையின் நியாயத்தன்மையும் பரந்த அளவில் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலைமை மேலும் சிறப்புறவும், தென்னிலங்கையிலும் சர்வதேசத்திலும் அக் கோரிக்கையில் உள்ள நியாயங்களை விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்தவும், இயன்றளவில் மிகப் பெரும்பான்மையான தமிழ்த் தேசியச் செயற்பாட்டு சக்திகளுடன் இணைந்து முன்கொண்டு செயற்படுவது, தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு அவசியமானது என்பதை எமது கட்சியின் மத்தியகுழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொண்டதோடு அதனை முன்கொண்டு செல்வதற்கும், அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# புலம்பெயர்ந்தோரிடம் ஒரு விண்ணப்பம்

■ நிதர்ஷன் வினோத்



புலம்பெயர் உறவுகள் சிறந்த பொறிமுறையின் கீழ் நிதியுதவிகளை மேற்கொள்ளுதல் சிறப்பாக அமையும் என ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு.

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் (Marc - Andre Franche) உள்ளிட்ட குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை, புதன்கிழமை(06) சந்தித்து கலந்துரையாடினர். இந்த கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம், கல்வி, விவசாயம், தொழிற்துறை ஊக்குவிப்பு, காணி விடுவிப்பு, கண்ணிவெடி அகற்றும் பணி, மீள்குடியேற்றம், இயற்கை வளங்கள், முதலீட்டு திட்டங்கள், முன்னுரிமை படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள், பாதுகாப்பு துறையினரின் செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகள் அதிகம் தேவைப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டார். அவர்களுக்கான உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் எனவும், நவீன தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்க வேண்டும் எனவும் ஆளுநர் கூறினார்.

அத்துடன் புலம்பெயர் உறவுகள், வடக்கிலுள்ள தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகளை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புலம்பெயர் உறவுகளால் வடக்கு மாகாண மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவ முடியும் என குறிப்பிட்ட ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச், முன்னுரிமை வழங்க வேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு அவற்றில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், சிறந்த பொறிமுறையின் ஊடாக முதலீடுகளை மேற்கொள்வது சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார். வடக்கில் காணப்படும் இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி பாரிய திட்டங்களை மேற்கொள்ளும் போது பிரதேச மக்களின் நலன்கள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என அவர் கூறினார்.

மேலும் இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி மேற்கொள்ளும் திட்டங்களில் பெற்றுக்கொள்ளும் இலாபத்தில் அந்தந்த கிராம அபிவிருத்திக்கென ஒருதொகை நிதி ஒதுக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

காணி உரித்துகள் வழங்கப்படுகின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயம் எனவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து எவ்வாறான ஒத்துழைப்புகள் தேவை எனவும் அவர் இதன்போது வினவினார்.

மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையை நிறைவு செய்ய கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும், இதற்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுப்பது அவசியம் எனவும் ஆளுநர் கூறினார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் செயற்படும் சர்வதேச அமைப்புகள் வடக்கில் இதுவரையில் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்த ஆளுநர், அனைத்து துறைகளுக்குமான அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

## மேலதிக அரசாங்க அதிபர் ஜெகராஜன்



■ வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரியான காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக பொது நிர்வாக அமைச்சு இந்நியமனத்தை வழங்கி வைத்துள்ளது.

மேலதிக அரசாங்க அதிபராக இருந்த வேதநாயகம் ஜெகதீசன், பதவி உயர்வு பெற்று போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சுக்கு செல்கின்ற காரணத்தினால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## ஆலய கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம், புங்குடுதீவு மடத்துவெளி வயலூர் முருகன் ஆலய கிணற்றிலிருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் செவ்வாய்க்கிழமை (05 ) மீட்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு , மடத்துவெளி எட்டாம் வட்டாரத்தை சேர்ந்த 27 வயதுடைய சிவகுகானந்தன் சிந்துயா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மூன்று உறுப்பினர்களும் ஐ.ம.சவுடன் இணைந்தனர்







எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில், மேலும் மூன்று உறுப்பினர்கள் இணைந்துகொண்டுள்ளனர்.

அந்த வகையில், வடமேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க இணைந்து கொண்டார். வடமேல் மாகாண சபை கலைக்கப்படும் வரை அவர் அங்கு முதலமைச்சராக பதவி வகித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிங்கிரிய தேர்தல் தொகுதி அமைப்பாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

இரண்டாவதாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொத்துவில் தேர்தல் தொகுதியின் ஏற்பாட்டாளரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொத்துவில் தேர்தல் தொகுதியின் முன்னாள் பிரதான அமைப்பாளரும், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அப்துல் மஜீத், ஐக்கிய மக்கள் சக்தியில் செவ்வாய்க்கிழமை (04) இணைந்து கொண்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தேர்தல் தொகுதியின் இணை அமைப்பாளராக அவர் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் சமந்த பிரதீப் குமார இணைந்துகொண்டார். அவர், ஐக்கிய சக்தியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக செவ்வாய்க்கிழமை (04) நியமிக்கப்பட்டார்.

## திருந்தாத சிறுவயது காதலர்கள்

■ எம்.றொசாந்த்

சிறுவயது காதல் ஜோடியொன்று , நீதிமன்றினால் தண்டிக்கப்பட்ட பின்னரும் மீண்டும் வீட்டை விட்டு வெளியேறி பிறிதொரு இடத்தில் தங்கியிருந்த நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியை சேர்ந்த 18 வயது இளைஞனும், 16 வயது சிறுமியும் காதலித்து வந்த நிலையில் கடந்த 06 மாத கால பகுதிக்கு முன்னர் வீட்டை விட்டு வெளியேறி பிறிதொரு இடத்தில் தங்கியிருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

நீதிமன்ற விசாரணைகளையடுத்து, இளைஞனுக்கு 3 மாத கால சிறைத்தண்டனை விதித்த மன்று, சிறுமியை சீர்த்திருத்த பள்ளியில் சேர்க்குமாறு கட்டளையிட்டது.

இந்நிலையில் இருவரது தண்டனை காலங்களும் நிறைவடைந்து தமது வீடுகளுக்கு திரும்பியவர்கள், மீண்டும் தமதுவீட்டை விட்டு வெளியேறி, யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் தங்கிருந்துள்ளனர்.

இது தொடர்பில் தகவல் அறிந்த பொலிஸார் இருவரையும் கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கெரண்டியில் குதித்த இளம் ஜோடி மீட்பு


கொத்மலை கெரண்டி நீர்வீழ்ச்சியில் இருந்து கீழே குதித்து தங்களுடைய உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற இளம் ஜோடி, அப்பகுதி மக்களால் காப்பாற்றப்பட்ட சம்பவமொன்று புதன்கிழமை (05) இடம்பெற்றுள்ளதாக கொத்மலை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புஸ்ஸல்லாவ, ப்ரோடெக் தோட்டத்தை சேர்ந்த 18 வயதுடைய இளம் காதல் ஜோடியே இவ்வாறு தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நீர்வீழ்ச்சியில் இருந்து கீழே குதித்த இளம் ஜோடி, பிரதேசவாசிகளால் காப்பாற்றப்பட்டுள்ளதுடன், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இருவரும் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மீட்கப்பட்ட இளம் ஜோடியை புஸ்ஸல்லாவ பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்ததன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கம்பளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

## சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் பங்கேற்பு



ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ், ஜெனீவா ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெறுகின்ற 112 ஆவது சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் பங்கேற்றுள்ளார்.

அவர், ஈரான் நாட்டின் தொழில் அமைச்சரையும் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

உலகளாவிய தொழில் சட்டங்கள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கும் தொழிற்சங்கம் என்ற ரீதியில் சர்வதேச தொடர்புகளை மேம்படுத்தவும் இவ் சந்திப்பு வலு சேர்த்ததாக தெரிவித்துள்ளார்.

## சர்வராஜா கடமையேற்றார்

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான வவுனிக்குளத்தின் நீர்பாசனப் பொறியியலாளராக எந்திரி.ச.சர்வராஜா, கடமைகளை திங்கட்கிழமை (03) பொறுப்பேற்றார்.

இதுவரை காலமும் வவுனிக்குளத்தின் நீர்பாசன பொறியியலாளராக கடமையாற்றிய எந்திரி.கை.பிரகாஷ், கிளிநொச்சி கிழக்கு பிரிவிற்கு இடமாற்றலாகி சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டுக்குள் புகுந்த பொலிஸ் ஜீப்

■ க. அகரன்



முல்லைத்தீவு - புளியங்குளம் பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்த புளியங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு சொந்தமான ஜீப்ரக வாகனம் திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வீட்டுடன் மோதி விபத்திற்குள்ளான சம்பவம் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்றுள்ளது.


இதனால் குறித்த வீடு சேதமடைந்ததுடன், வீட்டு உரிமையாளரது மோட்டார் சைக்கிளும், பொலிஸ் வாகனமும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, அந்த வீட்டில் தனியார் வகுப்புக்கு வந்த 20க்கும் மேற்பட்ட சிறுவர்கள், விபத்து இடம்பெறுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பாக, வீட்டின் மற்றுமோர் அறைக்குச் சென்றிருந்தமையால், உயிர் ஆபத்துக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வாகனத்தை புளியங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியே செலுத்தி வந்ததாகவும், அவரும் ஏனையோரும் மதுபோதையில் இருந்ததாகவும் வீட்டு உரிமையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## அமரர் சிவ சிதம்பரமின் 22 ஆவது நினைவேந்தல்

■ எஸ். தில்லைநாதன்



தமிழ்த் தலைவர்களில் ஒருவரும், நல்லூர் உடுப்பிட்டித் தொகுதிகளின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றத்தின் முன்னாள் பிரதி சபாநாயகருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் 22 ஆவது நினைவு தினம் கரவெட்டியில் புதன்கிழமை (05) அனுஷ்டிக்கப்பட்டது.

நெல்லியடி பஸ் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு முன்பாக, கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

# இயற்கை அனர்த்தங்களில் வினோதம் வேண்டாம்

கனமழை மற்றும் பலத்த காற்று உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால், செவ்வாய்க்கிழமை (04) வரையிலும் 17 பேர் மரணித்துள்ளனர். 13 பேர் காயமடைந்துள்ளனர். ஒருவர் காணாமல்போயுள்ளார். 41,610 குடும்பங்களைச் சேர்ந்த 1,61,290 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வானிலை தொடர்பில் எதிர்வு கூறப்பட்டதே தவிர, எச்சரிக்கை விடுக்கப்படவில்லை இதனால் சில உயிரிழப்புகள் இடம்பெற்றன.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்திருந்தால், சில உயிரிழப்புகளை தவிர்த்திருக்கலாம் என்பது எமது புரிதலாகும். பேரழிவை எதிர்கொண்ட மக்கள் தங்கள் வீடுகளை இழந்த பிறகு வானிலை அறிக்கைகளைக் கேட்பதை விட தங்கள் உயிரையும் உடைமைகளையும் காப்பாற்றுவதற்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள்.

இந்த காரணத்திற்காக, வானிலை ஆய்வு மையம் குறைந்தபட்சம் சில மணிநேரங்களுக்கு முன்னதாகவே எந்த ஆபத்து எச்சரிக்கையையும் வெளியிடும் திறன் பெற்றிருக்க வேண்டும். தற்செயல் நடவடிக்கைகளுக்குத் தயார்படுத்தவும் இது பேரிடர் மேலாண்மை மையத்திற்கு உதவுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன், சொந்த இடங்களை இழக்கும் குடும்பங்களுக்கு உணவு, நிவாரணம் மற்றும் மாற்றுத் தங்குமிட வசதிகள் செய்து தருவது அவசியம். அதுமட்டுமின்றி, சேதங்களுக்கு இழப்பீடும் வழங்க வேண்டும்.

இயற்கை அனர்த்தங்களால் நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணை தொகை, வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றவகையில் இல்லையென்றும், பழைய சுற்றறிக்கையை கைவிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு வழிசமைக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டின் உட்கட்டமைப்பைக் கவனிக்கும் மிகப்பெரிய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அரசியல் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளமை நிலைமையை மேலும் சிக்கலாக்குவதற்கு வலுவான காரணமாகும்.

பல வருடங்களாக இயங்காமல் இருந்த உள்ளூராட்சி நிறுவனங்களை அந்த நிலைமைக்கு கொண்டு வருவதற்கு உழைத்த அனைத்து அரசியல் தலைவர்களும் இந்த விடயத்தில் பொறுப்பு கூற வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள், நகர சபைகள் மட்டுமன்றி மாநகர சபைகளிலும் மக்கள் பிரதிநிதிகள் இருந்திருந்தால் இவ்வாறான இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கு பெரும் நிவாரணமாக இருந்திருக்கும்.

அரசியல் ஆதாயங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகளை செயலிழக்கச் செய்வதால் பாதிக்கப்படுவது சாமானியர்களே என்பது மிகப்பெரிய சோகம். குறைந்த வருமானம் பெறும் மக்களே இயற்கை அனர்த்தங்களினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் விரைவில் நிவாரணம் வழங்க அதிகாரிகளுக்கு நினைவூட்டுவோம். செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதைப் பற்றிப் பேசும் நாட்டில், துல்லியமான முன்னறிவிப்பைச் செய்ய முடியாத வானிலை ஆய்வுத் துறை இருக்கிறது என்பதையும் சொல்ல வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் அப்பால், இயற்கை அனர்த்தங்களின் போது வினோத விளையாட்டுகளில் ஈடுபடுவதை முற்றாக கைவிடவேண்டும். இது, மனித உயிர்களுக்கு பங்கத்தை மட்டுமே விளைவிக்கும் என்பனை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# பதவிக்காலமும் துரதிர்ஷ்ட பிரதமர்களும்

முருகானந்தம் தவம்

இலங்கையின் பிரதமர் பதவி 1947 ஆம் ஆண்டில் இலங்கை ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தபோது உருவாக்கப்பட்டதில் இருந்து இதுவரையில் 15 பேர் மாறி,மாறி பிரதமர்களாகப் பதவிவகித்துள்ள போதும் இந்த பிரதமர்களில் பலருக்கும் பிரதமர் பதவிக்காலத்தை முழுமையாக பூர்த்தி செய்ய விடாத துரதிர்ஷ்டத்துக்கும் நெருங்கிய தொடர்புள்ள வரலாறே தொடர்ந்தும் பதிவாகி வருகின்றது.

அதாவது இலங்கையின் பிரதமர்களாக இருந்தவர்களில் ஓரிருவரைத் தவிர ஏனைய பலரும் தமது முழுமையான ஆட்சிக்காலம் வரை அந்தப்பதவியில் தொடர அவர்களை துரதிர்ஷ்டம் விட்டுவைக்கவில்லை.

துரதிர்ஷ்டம் துரத்தும் இந்த பிரதமர்கள் பட்டியலில் 4 தடவைகள் பிரதமராகவிருந்த போதும் பிரதமர் பதவிக்காலத்தை 4 தடவைகளும் முழுமையாக பூர்த்தி செய்யாத மஹிந்த ராஜபக்ஷ இரண்டாமிடத்தையும் 6 தடவைகள் பிரதமராகவிருந்தும் 6 தடவைகளும் பிரதமர் பதவிக்காலத்தை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத ரணில் விக்கிரமசிங்க முதலாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

இலங்கை பிரதமர்களுக்கும் அவர்களை தொடர்ந்தும் பதவியில் இருக்க விடாது விரட்டும் துரதிர்ஷ்டத்துக்கும் உள்ள தொடர்பு குறித்து பார்ப்போம்,

இலங்கையின் பிரதமர் பதவி 1947 ஆம் ஆண்டில் இலங்கை பிரித்தானியரிடமிருந்து விடுதலை அடைந்தபோது உருவாக்கப்பட்டது.1978 வரை பிரதமரே அரசுத்தலைவராகவும் இருந்தார்.

1978 இல், அப்போதைய பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்தன நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிவித்தார்.

இதன் மூலம் பிரதமரின் அதிகாரங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டன. ஜனாதிபதி நாட்டுத் தலைவராகவும், அரசுத் தலைவராகவும் ஆனார். பிரதமர் பதவி அதிகாரம் குறைக்கப்பட்ட பதவியானது.

இலங்கையில் பிரதமர் பதவி 1947 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதில் இருந்து இதுவரையில் 15 பேர் மாறி,மாறிப் பிரதமர்களாகப் பதவியேற்றுள்ளனர்.

இவர்களில் இலங்கையின் முதலாவது பிரதமர் என்ற பெருமைபெற்ற டி. எஸ். சேனநாயக்க 1947 செப்டெம்பர் 24 - 1952 மார்ச் 22 வரை பதிவு வகித்த நிலையில் முழு பதவி க்காலத்தையும் பூர்த்தி செய்யாமலேயே காலமானார் (அப்போது பதவி க்காலம் 6 வருடங்கள்).

இதனால் இவரின் மகனான டட்லி சேனாநாயக்க இலங்கையின் இரண்டாவது பிரதமராக 1952 மார்ச் 26 பதவியேற்றார்.

ஆனால் அவராலும் 1953 ஒக்டோபர் 12 வரை பதவி வகித்த நிலையில் இராஜினாமா செய்ததையடுத்து பிரதமராக பதவியேற்ற சேர்ஜோ.ன் கொத்தலாவலயால் 1953 ஒக்டோபர் 12 முதல் 1956 ஏப்ரல் 12 வரை மட்டுமே பதவி வகிக்க முடிந்தது.

> **அடுத்த தேர்தலில் தெரிவுச்செய்யப்படும் பிரதமர், தன்னுடைய பதவிக்காலத்தை முழுமையாக நிறைவுச் செய்வாரா? என்பதெல்லாம் அரசியல் களத்திலேயே தங்கியுள்ளது**

இதனையடுத்து 1956 ஏப்ரல் 12 இல் பிரதமராக பதவியேற்ற டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க 1959 செப்டெம்பர் 26 இல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதனால் கலாநிதி டபிள்யூ. தஹநாயக்க 1959 செப்டெம்பர் 26இல் பிரதமராக பதவியேற்று 1960 மார்ச் 20 வரை பிரதமர் பதவியில் இருந்தார்.

இந்நிலையில் மீண்டும் டட்லி சேனநாயக்க 1960 மார்ச் 21 இல் பிரதமராக பதவியேற்றபோதும் 1960.ஏப்ரல் 22 இல் அவரது அரசு தோற்கடிக்கப்பட்டதனால் பதவியிழந்தார்.

இதனையடுத்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக 1960 ஜூலை 21 பதவியேற்று உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையை பெற்று 1965 மார்ச் 25 வரை பதவி வகித்தார்.

இதேபோன்றே ஜே. ஆர். ஜயவர்தன 1977 ஜூலை 23இல் பிரதமராக பதவியேற்ற போதும் 1978 பெப்ரவரி 4 வரை மட்டுமே அந்தபதவியில் தொடந்த பின்னர் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

இதனையடுத்து ஆர். பிரேமதாச 1978 பெப்ரவரி 6 ஆம் திகதி பிரதமராக பதவியேற்று 1978 செப்டெம்பர் 7 வரை பதவி வகித்த நிலையில் மீண்டும் நடந்த பாராளுமன்ற த்தேர்தலை தொடர்ந்து மீண்டும் பிரதமராகி 1989 ஜனவரி 2 வரை பதவி வகித்தார்.

அதன்பின்னர் டி. பி. விஜயதுங்க 1989 மார்ச் 6 முதல் 1993 மே 7 வரை பிரதமராக இருந்த நிலையில் ஜ னாதிபதி பிரேமதாச படுகொலை செய்யப்பட்டதை அடுத்து விஜேதுங்க புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இதனையடுத்து ரணில் விக்கிரமசிங்க 1993 மே 17 முதல் 1994 ஓகஸ்ட் 19 வரை பிரதமர் பதவியில் இருந்தார் அதன்பின்னர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஓகஸ்ட் 19 முதல் 1994 நவம்பர் 12 வரையான குறுகிய காலம் பிரதமர் பதவியில் இருந்துவிட்டு ஜனாதிபதியானார் .

இதனால் சிறிமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் 1994 நவம்பர் 14 ஆம் திகதி பிரதமராகி 2000 ஓகஸ்ட் 9 பெப்ரவரி வரையிலும் அப்பதவியில் இருந்து விட்டு பதவி விலகினார்.

இதனையடுத்து இரத்தினசிறி விக்கிரமநாயக்க 2000 ஓகஸ்ட் 10 இல் பிரதமராக பதவியேற்று 2001 டிசெம்பர் 7 வரை மட்டும் அப்பதவியில் இருந்தார்.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் 2001 டிசெம்பர் 9 இல் பிரதமரானபோதும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ரணில் விக்கிரமசிங்கவின் அரசைக் கலைத்ததையடுத்து 2004 ஏப்ரல் 6 இல் பதவி விலகினார்.

இதன்பின்னர் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலையடுத்து மஹிந்த ராஜபக்ஷ 2004 ஏப்ரல் 6 இல் பிரதமராக பதவியேற்ற போதும் 2005 நவம்பர் 19 வர மட்டுமே அப்பதவியில் இருந்த அவர் பின்னர் ஜனாதிபதியானார்.

இதன் பின்னர் இரு பிரதமர்கள் தமது பதவியை பூரணமாக வகித்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் 2015 ஜ னவரி 9 இல் பிரதமராகி 2015 ஓகஸ்ட் 21ஆம் திகதி வரை மட்டும் அப்பதவியில் தொடர்ந்தார்.

இந்நிலையில் 2015 ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதை அடுத்து நல்லாட்சி அரசு என்ற பெயரில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக 2015 ஓகஸ்ட் 21 பதவியேற்று 2018 ஒக்டோபர் 26 வரை மட்டுமே பதவி வகித்தார். இதன்பின்னர் மைத்திரிபால சிறிசேனவினால் 2018 ஒக்டோபர் 26 இல் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டபோதும் அவரால் 2018 டிசெம்பர் 15 வரை மட்டுமே பதவி வகிக்க முடிந்தது.

இதன்பின்னர் 2018 டிசெம்பர் 16 இல் மீண்டும் பிரதரான ரணில் விக்கிரமசிங்க 2019 நவம்பர் 21 வரை பதவி வகித்த நிலையில் நடந்த ஜனாதிபதித்தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வென்றதை தொடர்ந்து 2019 நவம்பர் 21 மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக அறிவிக்கப்பட்ட நிலையில் 2020 ஓகஸ்ட் 5 வரை பதவி வகித்தார்.

பின்னர் நடந்த பாராளுமன்றத் தேர்தலையடுத்து மீண்டும் 2020 ஓகஸ்ட் 9 இல் பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ மக்களின் போராட்டத்தினால் 2022 மே 9 பதவி விலகினார்.

இதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ அரசில் ரணில் விக்கிரமசிங்க 2022 மே 12 ஆம் திகதி பிரதமராக பதவியேற்று 2022 ஜூலை 20 வரி பதவி வகித்த நிலையில் மக்கள் போராட்டத்தினால் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து விலயதினால் ஜனாதிபதி பொறுப்பையேற்றார்.

இதனால் தினேஷ் குணவர்தன 2022 ஜூலை 22 ஆம் திகதி பிரதமராகி இன்றுவரை பிரதமராக இருக்கின்றார்.

எனினும் இவரும் தனது முழுமையான பிரதமர் பதவிக்காலத்தை நிறைவு செய்யமுடியாத துரதிர்ஷ்ட பிரதமர்கள் பட்டியலிலேயே இடம்பிடித்துள்ளார். இந்நிலையில், அடுத்த பாராளுமன்ற தேர்தலில் கடுமையான போட்டி நிலவும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. அந்தத் தேர்தலில் தெரிவுச்செய்யப்படும் பிரதமர், தன்னுடைய பதவிக்காலத்தை முழுமையாக நிறைவுச் செய்வாரா? என்பதெல்லாம் அரசியல் களத்திலேயே தங்கியுள்ளது. நமது நாட்டை பொறுத்தவரையில். ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்கு அல்லது நீடித்துக்கொள்வதற்கு கடந்தகாலங்களில் பல திருகுதாளங்கள் போட்டப்பட்டன.



## வாழ்வியல் தரிசனம்

வேண்டப்பட்டவர்களுக்கு வேண்டப்படும் உண்மைகளை மறைக்கக்கூடாது. இன்றைய உலகத்தில் தமக்குப் பிடித்தவர்களுக்காக நீதிக்குப் புறம்பானவற்றைத் தாராளமாகச் செய்துவருகின்றார்கள்.

உண்மையை மறைப்பது எதிர்வினையை உண்டாக்கும். ஆனால், சத்தியத்திற்குச் சாவில்லை. மறைந்து நின்று அதன் வலிமையைக் காட்டும்.

உலகம் பெற்றுவரும் அனுகூலங்களை, மனிதன் மறைமுகமாகத் திருடுகின்றான். பல தடவைகள் கஷ்டப்பட்டு இயற்கை வளத்தை பெருக்காமல், மிகச் சுலபமாக அதில் கைவைத்து சுய லாபங்களுக்காக அழிக்க முற்படுகின்றான்.

இது எதிர்கால வாரிசுகளுக்குச் செய்யும் துரோகமுமாகும். நீர் நிலைகளில் வீடு கட்டுதல், மகாபாவம். இது நீர்வளம் பெருகுவதை தடுக்கும் செயலாகும்.

அடாத செயல்களை அழிப்பது தவறானது எனும் கருத்தை உதறிச் செயல்படுவது சுயநலத்தின் கோர்வையாக வளர்ந்துவிட்டது.

உண்மை நிலைகளை மறந்து கிடைப்பததைச் சுருட்டுவதே பெரும் இலாபம் எனக் கருதும் நிலை உருவாகிவிட்டது. அறம் என்பது உண்மையின் வடிவத்தில் ஒன்று. அறவழியே நிரந்த அமைதி.

பருத்தியூர்
பால–வயிரவநாதன்

## கடிதங்கள்

### பேருந்து சேவை வேண்டும்

கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலயத்தினை இலக்காக கொண்டு பேருந்து சேவைகள் நடாத்தப்பட வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் நல்லூர் கிராம அலுவலர் பிரிவில் முக்கொம்பன் கிராமம் அமைந்துள்ளது.

600 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் கிளிநொச்சியில் இருந்து கந்தபுரம் வழியாக முக்கொம்பனுக்கு நடைபெற்ற பேருந்து சேவை ஒன்று இரு ஆண்டுகளுக்கு முன்னர் நிறுத்தப்பட்டது.

இதேபோன்று அரசபுரம், நேரடம்பன் ஆகிய கிராமங்கள் வழியாக முக்கொம்பன் வரை நடைபெற்ற அரச பேருந்தும் ஒரு ஆண்டுகளுக்கு முன்னர் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பூநகரி 10ம் கட்டை வழியாக முக்கொம்பன் வரை நடைபெறுகின்ற பேருந்து சேவைகளும் ஒழுங்காக நடைபெறுவதில்லை என தெரிவித்து இரு வாரங்களுக்கு முன்னர் இக்கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால், பேருந்து சேவைகள் ஒழுங்காக நடைபெறாததன் காரணமாக முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவர்களும் கிராம மக்களும் பெரும் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

போக்குவரத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்





தனி பெரும்பான்மை இல்லை

# கூட்டணி பலத்துடன் ஆட்சி அமைக்கும் பாஜக

## 3-வது முறையாக பிரதமர் ஆகிறார் மோடி

மக்களவை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி (பாஜக) தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அறுதி பெரும்பான்மை பெற்றுள்ளது. 3-வது முறையாக மோடி பிரதமராக பதவியேற்க உள்ளார்.

நாடு முழுவதும் மக்களவை பொது தேர்தல் ஏப்ரல் 19ம் திகதி முதல் ஜூன் 1-ம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெற்றது. மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் குஜராத்தின் சூரத் தொகுதியில் பாஜக வேட்பாளர் முகேஷ் தலால் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். மற்ற 542 தொகுதிகளிலும் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பாஜக தலைமையிலான தேசியஜனநாயக கூட்டணிக்கும் எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணிக்கும் நேரடி போட்டி நிலவியது.

இந்நிலையில், நாடு முழுவதும் செவ்வாய்க்கிழமை (04) வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. உத்தர பிரதேசத்தின் வாராணசி தொகுதியில் பிரதமர் மோடி 1.50 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி 2 தொகுதிகளில் போட்டியிட்டார். இதில், உத்தர பிரதேசத்தின் ரேபரேலியில் 3.90 லட்சம் வாக்குகள் வித்தியாசத்திலும், கேரளாவின் வயநாடு தொகுதியில் 3.64 லட்சம் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றார்.

**“காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் மக்களின் சொத்துக்களை அதிக குழந்தைகள் உள்ளவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்,” ‘மதங்களுக்கிடையே பிளவினை ஏற்படுத்தும் முயற்சி’ மற்றும் ‘சிறுபான்மையினருக்குக் குழி பறிக்கும் முயற்சி’ என, காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் புகார்... அளித்தன.**

மத்தியில் ஆட்சி அமைக்க 272 எம்.பி.க்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், ஆளும் பாஜகவுக்கு தனித்து அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. உத்தர பிரதேசம், மகாராஷ்டிராவில் இண்டியா கூட்டணி அபார வெற்றி பெற்றிருப்பது, பாஜகவுக்கு பின்னடைவாக அமைந்துள்ளது. மேற்கு வங்கத்திலும் பாஜகவுக்கு எதிர்பார்த்த அளவு வெற்றி கிடைக்கவில்லை.

எனினும், ஒடிசா, தெலங்கானா, கர்நாடகாவில் கணிசமான தொகுதிகளை பாஜக கைப்பற்றியுள்ளது. கேரளாவின் திருச்சூர் தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்ட நடிகர்சுரேஷ் கோபி 74,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த நிலையில், சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளம் ஆகிய கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் மத்தியில் 3-வது முறையாக பாஜக ஆட்சி அமைக்கிறது. பிரதமராக மோடி 3-வது முறை யாக பதவியேற்க உள்ளார். குடியரசுத் தலைவர் மாளிகையில் வரும் 9-ம் திகதி பதவியேற்பு விழா நடைபெற வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே, ஐக்கிய ஜனதா தளம் (ஜேடியு) கட்சியை இழுக்க இண்டியா கூட்டணி தலைவர்கள் திரைமறைவில் தீவிர முயற்சி செய்து வருகின்றனர். ஆனால், இண்டியா கூட்டணியில் இணைய மாட்டோம் என்று ஜே.டி.யு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

புதிய அரசில், நிதிஷ் குமாருக்குதுணை பிரதமர் பதவியும், சந்திரபாபு நாயுடுவுக்கு தேசிய ஜனநாயக கூட்டணி ஒருங்கிணைப்பாளர் பதவியும் வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.

‘மத்தியில் தொடர்ந்து 3-வது முறை ஆட்சி அமைப்பதற்காக பாஜக கூட்டணிக்கு வாக்களித்த மக்களுக்கு தலை வணங்குகிறேன்’ என்று பிரதமர் மோடி, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

2024 பொதுத் தேர்தலின் முதல் கட்டத்திற்கும் 2019 பொதுத்தேர்தலின் முதல் கட்டத்திற்கும் இடையே இருக்கும் ஒரு பெரிய வித்தியாசம் - வாக்கு சதவீதத்தில் சரிவு.

ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாராவில் பேசிய பிரதமர் மோதி, “காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் மக்களின் சொத்துக்களை அதிக குழந்தைகள் உள்ளவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்,” என்று இஸ்லாமியர்களைக் குறிவைத்துக் கூறினார்.

இந்த அறிக்கையை ‘மதங்களுக்கிடையே பிளவினை ஏற்படுத்தும் முயற்சி’ மற்றும் ‘சிறுபான்மையினருக்குக் குழி பறிக்கும் முயற்சி’ என, காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்தன.

சில ஆய்வாளர்கள் மோதியின் இந்தப் பேச்சு குறித்து ஆச்சரியத்தை வெளிப்படுத்தினர். இது ‘அவரது வாக்காளர்களை ஒன்றிணைக்கும் முயற்சி’ என்று கூறினர்.

“பிரதமர் மோதி தேர்தல் பிரசாரத்தில் இந்து-முஸ்லிம் அரசியலை இவ்வளவு வெளிப்படையாகப் பேசியது இதுவே முதல் முறையாக இருக்கலாம். ஏனெனில், பொதுவாக அவர் முந்தைய தேர்தல்களில் இதுபோன்ற நேரடி அறிக்கைகளை தவிர்த்தார்,” என்கிறார் மூத்த பத்திரிகையாளர் வீர் சங்வி.

2019-இன் குடியுரிமை (திருத்தம்) சட்டத்துக்கு எதிரான பல மனுக்கள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நிலையில் கூட, தேர்தலுக்கு முன்பு, மத்திய உள்துறை அமைச்சகம் திடீரென இந்தச் சர்ச்சைக்குரிய குடியுரிமை (திருத்த) விதிகளின் அறிவிப்பை வெளியிட்டது.

ஒருவேளை வாக்காளர்கள் இந்த நடவடிக்கையை ‘மதவாத அரசியலுடன்’ இணைத்துப் பார்த்திருக்கலாம்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் மற்றும் அரசியல் துறையின் முன்னாள் பேராசிரியரான புஷ்பேஷ் பந்த், “தற்போது, இந்தியாவில் மதவாத அரசியல் அதன் உச்சத்தில் உள்ளது,” என்கிறார்.

அவர் மேலும் கூறுகையில், “ஒரு மாதத்திற்கும் மேலாக நடந்த இந்த நீண்ட தேர்தலில், கோவில்கள், மசூதிகள் போன்ற பிரச்னைகளில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் எவ்வாறு குறிவைக்கப்படுகிறார்கள் என்பதை அனைவரும் பார்த்தனர். இவை அனைத்தும் உணர்ச்சியால் நடக்கவில்லை. இது நன்கு திட்டமிடப்பட்ட உத்தியின் ஒரு பகுதியாகும்,” என்கிறார்.


இறுதியாக, பா.ஜ.க-வின் தேர்தல் அறிக்கை முதல் ஒவ்வொரு பா.ஜ.க பிரசாரகரின் பேச்சிலும் ஒரு பகுதியாக இருந்த ‘அந்தப் பிரச்னை’.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் உத்தரப் பிரதேச அயோத்தியில் ராமர் கோவில் கும்பாபிஷேகம் பிரதமர் தலைமையில் நடைபெற்றது.

அயோத்தியில் ரூ.10,000 கோடி செலவில் நகரை புதுப்பித்து ‘உலகளாவிய நகரமாக’ மாற்றுவோம் என்ற பா.ஜ.க-வின் கூற்றை அந்தப் பகுதி வாக்காளர்கள் ஏற்கவில்லை.

அயோத்தியின் ஐந்து தொகுதிகளிலும் - ஃபைசாபாத், பாரபங்கி, அமேதி, அம்பேத்கர் நகர், மற்றும் சுல்தான்பூர் - பா.ஜ.க தோல்வியடைந்திருக்கிறது.

மொத்த தொகுதிகள் 543 வெற்றி/முன்னிலை நிலவரம்



| தேசிய ஜனநாயக கூட்டணி 293 | | இண்டியா கூட்டணி 232 | |
|---|---|---|---|
| பாஜக | 240 | காங்கிரஸ் | 99 |
| தெலுங்கு தேசம் | 16 | சமாஜ்வாதி | 37 |
| ஐக்கிய ஜனதா தளம் | 12 | திரிணமூல் காங்கிரஸ் | 29 |
| சிவசேனா (ஷிண்டே) | 7 | திமுக | 22 |
| இதர கூட்டணி கட்சிகள் | 18 | சிவசேனா (தாக்கரே) | 9 |
| மற்றவை 18 | | தே.வா. காங் (சரத் பவார்) | 7 |
| | | ராஷ்டிரிய ஜனதா தளம் | 4 |
| | | இதர கூட்டணி கட்சிகள் | 25 |

# சிறப்புச் சிறுகதை



வ.அ.இராசரத்தினம்



வ.அ.இராசரத்தினம் (1925 ஜூன் 05, 2021 பெப்ரவரி ,2002) புகழ் பெற்ற ஈழத்து சிறுகதை, நாவல் எழுத்தாளர்.

சுருக்கமாக வ. அ. என அறியப்படுபவர். ஈழநாகன், கீழக்கரை தேவநேயப் பாவாணர், வியாகேச தேசிகர் என்னும் பல புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். திருகோணமலை மாவட்டம், மூதூரைப் பிறப்பிடமாக கொண்ட இவரின் பெற்றோர் வஸ்தியாம்பிள்ளை, அந்தோனியா. தாமரைவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் பின்னர் மூதூர் புனித அந்தோனியார் பாடசாலையிலும் கல்வி கற்றார். 1952 இல் மேரி லில்லி திரேசா என்பாரைத் திருமணம் புரிந்தார்.

1946 இல் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியப் பயிற்சியைப் பெற்றார்.

அங்குதான் அவர் தனது மழையால் இழந்த காதல் என்ற சிறுகதையை எழுதினார். இது 1948 ஆம் ஆண்டு செப்டம்பரில் தினகரன் பத்திரிகையில் வெளிவந்தது. இவரது முதற் கவிதை திருகோணமலையில் இருந்து அ.செ. முருகானந்தனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த எரிமலை என்ற பத்திரிகையில் 1948 இல் வெளிவந்தது. இவர் தனது இலக்கியப் பயணத்தை சுய வரலாற்று நூலாக இலக்கிய நினைவுகள் என்ற பெயரில் எழுதியுள்ளார்.

## பெண்

ஆனந்தனுக்கும் திலகத்துக்கும் கல்யாணமாகி இரண்டு மாதங்கள் கூட ஆகியிருக்காது. ஆதர்ச தம்பதிகள் என்று சொல்வார்களே அந்தச் சொற்றொடருக்குப் பொருளாகவும் விளக்கம்போலவும் அவர்கள் வாழ்ந்தார்கள். ‘கல்யாணமானதும் காதல் கருகிவிடுகிறது’ என்று குறும்புத்தனமாகவோ அல்லது அர்த்தத்தோடோ எழுதும் இந்த இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் சிலர் வெட்கப்படும்படியாக அவர்கள் வாழ்க்கை அமைந்திருந்தது. அக்கம் பக்கத்துப் பெண்கள் அவள் என்ன சொக்குப் பொடி போட்டாளோ?’ என்றுகூடக் குசுகுசுத்தனர். இதனை அவர்கள் அறிந்தார்களோ என்னவோ அவர்கள் இன்பமாக வாழ்ந்தார்கள்.

அன்று மத்தியானச் சாப்பாடாகிட்டது.

உண்ட மயக்கத்தில் ஆனத்தன் தன் கட்டிலிலிருந்த தலையணையில் முதுகைச் சாய்த்துக் கொண்டு கிடக்கிறான். கையிலே நித்திரையை வருவிப்பதற்காகவோ அல்லது தடுப்பதற்காகவோ ஒரு புத்தகம். திலகம் சமையலறை ஒழுங்குகளைச் செய்து விட்டு வருகிறாள்.

**தொழு நோய் பிடித்த கணவனைத் தன் தலையாலேயே சுமந்து சென்றவளைக் கற்புக்கரசியென்று கையேந்தும் இந்த நாட்டில் அவள் அழாமல் வேறு என்ன செய்வாள்? ஏனென்றால் அவள் பெண்!**

அறைக்குள்ளே கிடந்த அடுத்த கட்டிலில் அவளும் படுத்திருக்கலாம். ஆனால் அவள் அதை விரும்பவில்லை . அவன் நித்திரையாய் விடுவான் என்ற பயமோ என்னவோ அவள் கதிரையை எடுத்துப் போட்டுக்கொண்டு அவன் முன்னால் உட்காருகிறாள். ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காக அவள் கையில் ஒரு புடவைத்துண்டும் ஊசியும் நூலும். அவள் கண்களிலே அவனை வெற்றிக்கொண்ட ஒரு பெருமிதம் வெறியாட்டம் போட்டுக்கொண்டிருக்கிறது. அவள் தைத்துக்கொண்டிருக்கிறாள்.

இடையிடையே என்னென்னவோ கேட்டு அவன் வாசிப்பைத் தடுத்து, நித்திரையைக் கலைத்து நித்திரை மயக்கில் அவன் பேச்சுக் கொடுக்கத் தவறும் போது அப்பாடா அவள் படும்பாடு! காலம் ஊர்ந்து கொண்டேயிருக்கிறது. திலகம் தைத்துக்கொண்டிருக்கிறாள். ஆனந்தன் படித்துக்கொண்டிருக்கிறான். அப்போதுதான் கனகம் அறைக்குள்ளே வருகிறாள். அன்றைக்குத்தான் அவள் பட்டினத்திலிருந்து வந்திருக்கிறாள்.

கனகம், ஆனந்தனுக்கு மாமி மகள். ஒருகாலத்தில் அவள் தனக்கு மனைவியாகலாம் என்று ஆனந்தன் எண்ணியதுண்டு. கனகமும் எதிர்பார்த்ததுண்டு. ஆனால் இப்போது ஏதோ காரணத்தினால் கனகம் பிறந்த கிராமத்தையே விட்டுப்போய்ப் பட்டினத்திற் படிக்கலானாள் ‘நாணம், மடம் அச்சம் நாய்கட்கு



வேண்டும்’ என்று பாரதியாரின் கனவுப் பெண் சொன்னாளல்லவா? அந்தப் புதுமைப் பெண்ணின் பிரத்தியட்ச ஷரூபமாய் இருப்பாள் கனகம்.

தனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதைக் காட்டிக்கொள்வதற்காக வாயையும் உதடுகளையும் சதவக்கிரமமாக்கிக் கொண்டு அத்தான்’ என்றழைக்கும்போது ஆனந்தனுக்கு அவள் தன்னை இன்னோர் முறை அப்படிக் கூப் பிடமாட்டாளா என்றிருக்கும். கனகத்துக்கும் ஆனந்தன் மேல் ஒரு பாசம்! கனகம் அறைக்குள்ளே வருகிறாள்.

ஒருக்கணித்துச் சாத்தப்பட்டிருந்த கதவால் நுழையும்போது எதிரேயிருந்த திலகந்தான் அவள் கண்களிற் படக்கூடிய தாயிருக்கிறது. அத்தான் வீடு என்ற உரிமையோடு தடபுடலாக நுழைந்த கனகம் கட்டில் விளிம்பில் இருந்து கொண்டு திலகத்துடன் பேச்சுக் கொடுக்கிறாள். ஆனந்தன் படுத்திருப்பது அவளுக்குத் தெரியாது.

சத்தங்கேட்ட ஆனந்தன் கையிற் பிடித்திருந்த புத்தகத்தை மார்பிற் கவிழ்த்து வைத்துவிட்டுத் திரும்பிப்பார்க்கிறான்.

ஒழுங்காக வாரிவிடப்பட்டுத் தலையில் ஒட்டி நெளி ந்தோடும் கேசமும், பின்னல் முடிந்தவிடத்தில் வண்ணாத்திப் பூச்சியைப்போலத் தொத்திக்கொண்டிருந்த நீலநிற ‘றிபனும்’ அதற்குக்கீழ் விரிந்து பறந்து கொண்டிருந்த நீண்ட கூந்தலும், பேச்சுக்குரலும்,அவள் கனகந்தான் என்பதை அவனுக்கு அறிவுறுத்துகின்றன. ஒருகாலத்தில் அவளோடு பண்ணிய குறும்புத்தனத்தின் மெல்லிய நினைவுகள், அவள் படபடத்த வாயைக் கிளப்பி வேடிக்கை பார்க்கவேண்டுமென்ற ஆசையை அவன் மனதில் மூட்டுகின்றன. அவள் கூந்தலைக் கிள்ளிப்பிடித்து வெடுக்கென்று இழுக்கிறான் ஆனந்தன்.

கனகம் தடாரென்று திரும்பிப் பார்க்கிறாள். ஆனந்தனும் பார்த்துச் சிரிக்கிறான். கனகமும் ஒருகணம் முறைத்துப் பார்த்துவிட்டுச் சிரிக்கிறாள். இருவருக்கு பிடையில் குறும்புத்தனமான சம்வாதம் நீண்டுகொண்டே போகின்றது.

சிரிப்பும் கும்மாளமும் அறைச் சுவர்களில் மோதி எதிரொலிக்கின்றன. எதிரே கதிரையிலிருந்து திலகம் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருக்கிறாள். இத்தனை நேரமாக அவன் தன் மீது கொண்டிருந்த அலட்சியம், அதனால்

ஏற்பட்ட நிராசை, தன் முன்னிலையிலேயே அவன் கனகத்தோடு கொஞ்சுந்தாராளம், அதனால் ஏற்பட்ட பொறாமை எல்லாம் அவள் இதயத்தை முறுக்கிப் பிழிகின்றன அவனை வெற்றிகொண்ட வெறி ஓடியிருந்த அவள் கண்களில் ஏமாற்றத்தின் அவ நம்பிக்கையும், தோல்வியின் நமைச்சலும் கண்ணீரைப் பொழியவைக்கின்றன. திலகம் எழுந்து வெளியே நடக்கிறாள். அறைக்குள்ளே சிரிப்பினொலி கேட்டுக்கொண்டேயிருக்கின்றது! நிமிடங்கள் கரைகின்றன. எதையோ உணர்ந்து கொண்டவன் போல ஆனந்தனும் எழுந்து வெளியே போகின்றான்.

வீட்டுத் தாழ்வாரத்திற் திலகம் சேலைத் தலைப்பை முறுக்கிக்கொண்டு நிற்கிறாள். அவள் கன்னத்தில் கண்ணாடியில் விழுந்த மழைத்தாரையைப் போலக் கண்ணீர் கோடிழுத்துக்கொண்டு ஓடுகிறது.

ஆனந்தன் அவளை நெருங்குகிறான். “ஏன் அழுகிறாய்?”

“....”

ஆனந்தன் விஷயத்தை விளங்கிக்கொண்டும், “இதற்காகவா அழுகிறாய்?” என்கிறான்.

திலகம் பேசவேயில்லை. அவள் மௌனம் மன இரைச்சலுக்குப் பகைப்புலமாக நிற்கிறது.

ஆநந்தன் பெருமூச்சுவிட்டுக் கொண்டே மறுபடி அறைக்குள் போவதற்காகத் திரும்புகிறான். திலகம் தடாரென்று பாய்ந்து அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மிப் பொருமி அழுகிறாள். ஆம், பரத்தை வீட்டுக்குப்

போகவிரும்பிய தொழு நோய் பிடித்த கணவனைத் தன் தலையாலேயே சுமந்து சென்றவளைக் கற்புக்கரசியென்று கையேந்தும் இந்த நாட்டில் அவள் அழாமல் வேறு என்ன செய்வாள்?

ஏனென்றால் அவள் பெண்!

கேசரி-8-6-52 தோணி (சிறுகதைகள்), முதற் பதிப்பு: ஜூலை 1962, அரசு வெளியீடு, கொழும்பு.

# ஜூன் 8 இல் மோடி பதவியேற்பார்

பிரதமர் நரேந்திர மோடி, தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார். ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்தித்து தனது இராஜினாமா கடிதத்தை கைளளித்தார். மோடி அமைச்சரவையின் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் அளித்துவிட்டு, ஆட்சி அமைக்க உரிமையை கோரியுள்ளார்.


பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அமைச்சரவையின் இராஜினாமாவை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றார். 17-வது மக்களவையை கலைக்கும் பரிந்துரைகளையும் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய, ஜூன் 8-ம் திகதி மீண்டும்



பிரதமராக மோடி பதவியேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கூட்டணி கட்சிகள் ஆதரவுடன் மீண்டும் பிரதமராக மோடி பதவியேற்கிறார்.

## தடுப்பு கம்பியில் ஏறி தப்பிக்க முயற்சி



உத்தரபிரதேசத்தின் புலந்த்ஷார் பகுதியில் உள்ள கங்கை கால்வாயிலிருந்து முதலையொன்று வெளியே வந்துள்ளது.

எப்படியாவது மீண்டும் கால்வாய்க்கும் சென்றுவிட வேண்டும் என்பதற்காக அங்கிருந்த இரும்பு கம்பிகளால் ஆன தடுப்பு மீது தனது கனத்த உடம்போடு ஏற முயற்சித்தது. ஆனால் அது முடியாததால் தரையில் ஊர்ந்து தப்பியோட முயற்சித்தது.

யாருக்கும் எந்த ஆபத்தும் நேர்ந்து விடாமல் முதலையை பிடிக்க நினைத்த வனத்துறையினர் முதலில் அதன் தலையை துணியால் சுற்றினர். அதன்பின்னர் வேறு யாரையும் தாக்காமல் இருக்க அதன் கால்களை கயிறுகளால் கட்டினர்.

ஒரு வனத்துறை அதிகாரி தைரியமாக முதலையின் பின்னங்கால்களை கயிற்றல் சுற்றிக்கட்ட, மீதி நான்கு பேரும் அதன் தலை மற்றும் முன்கால்களை அசையாமல் பிடித்துக் கொண்டனர். இதற்கு நடுவே இருவர் அதன் வாலை தூக்குவதற்கு உதவி செய்ய, மற்ற அதிகாரிகள் முதலையின் தாடைப் பகுதியைச் சுற்றிலும் கயிறைக் கொண்டு கட்டினர். முதலை வெற்றிகரமாக மீட்கப்பட்டது.

சென்னை

## "தமிழகம் திராவிட பூமி "



தமிழ்நாட்டில் திராவிட மாடல் நல்லாட்சி நடத்துகின்ற மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைந்த இண்டியா கூட்டணி, அவர் பிரகடனம் செய்தவாறு 40 தொகுதிகளிலும் வெற்றி முரசு கொட்டி தமிழ்நாடு திராவிட பூமி என்பதை இந்தத் தேர்தல் நாட்டுக்கு உணர்த்தியிருக்கிறது என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக (மதிமுக) பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "நடைபெற்று முடிந்த 18 ஆவது மக்களவைத் தேர்தலில், இந்தியத் திருநாட்டு மக்கள் ஜனநாயகத்தை நிலைநிறுத்தியிருக்கிறார்கள். பத்தாண்டு காலம் பாசிச அரசு நடத்திய பாஜகவுக்கு மக்கள் பாடம் புகட்டியிருக்கிறார்கள். 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று ஆணவமும் அதிகாரத் திமிரும் கொப்பளிக்க தேர்தல் பரப்புரைகளில் மதவெறி ஊட்டி எதேச்சதிகாரப் போக்குடன் நடந்து கொண்டவர்களுக்கு மக்கள் சக்தி என்றால் என்ன என்பதை இந்தத் தேர்தல் உணர்த்தி உள்ளது.

இந்தோனேஷியா

நிலச்சரிவில் பலியானவரின்

## உடல் மீட்பு; மூவர் மாயம்

இந்தோனேஷிய மாகாணம் கிழக்கு ஜாவாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்த சுரங்க தொழிலாளி ஒருவரின் உடல் மீட்கப்பட்டுள்ளது. மேலும் மூவரின் நிலை அறிய முடியவில்லை எனவும் புதன்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தொழிலாளர்கள் ஆற்றின் கரையில் அமைந்த மண் சுரங்கத்தில் வேலை பார்த்து வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அதில் ஒருவர் தப்பி பிழைத்துள்ளதாக மீட்புப் பணி அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

நிலச்சரிவில் கொல்லப்பட்ட ஒருவரின் உடலை செவ்வாய்க்கிழமை 20 மீட்டர் ஆழத்திலிருந்து மீட்டுள்ளனர். மண் குவியலுக்கு கீழே இன்னும் மூவர் புதையுண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் உடல்களை மீட்கும் பணியில் கனரக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் மீட்புப் பணி தொடர்ந்து வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.


## பூமிக்கு திரும்பிய விண்கலம்


பீஜிங்,

நிலவின் தென்துருவத்தில் சந்திரயான்-3 விண்கலத்தை முதன்முறையாக தரையிறக்கி இந்தியா கடந்த ஆண்டு சாதனை படைத்தது. இதனை தொடர்ந்து சாங்கே-6 என்ற செயற்கைகோளை நிலவின் தென்துருவத்துக்கு சீனா அனுப்பியது. இந்த செயற்கைகோளின் விண்கலம் கடந்த 2-ஆம் திகதி நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

இந்த சாங்கே-6 விண்கலமானது நிலவில் இருந்து பாறைகள் மற்றும் மாதிரிகளை சேகரித்து பூமிக்கு கொண்டு வருவதற்காக அனுப்பப்பட்டது. இதற்காக அந்த விண்கலத்தின் எந்திரம் கடந்த இரு நாட்கள் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டது.

இந்தநிலையில் மாதிரிகளை சேகரித்த சாங்கே-6 விண்கலத்தின் லேண்டர் நிலவின் மேற்பரப்பில் இருந்து புறப்பட்டு அதன் சுற்றுப்பாதையில் நுழைந்துள்ளது. இது வருகிற 25-ஆம் திகதி பூமிக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.





அகாபுல்கோ

## மெக்சிகோவின் முதல் பெண் ஜனாதிபதி

மெக்சிகோ நாட்டில் 200 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் முதல் பெண் ஜனாதிபதியாக கிளாடியா ஷீன்பாம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதனை அதிகாரபூர்வ விரைவான எண்ணிக்கை (Quick Count) உறுதி செய்துள்ளது. தன்னுடன் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளர்கள் இருவர், தனக்கு வாழ்த்து சொல்லி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"நான் மெக்சிகோ நாட்டின் முதல் பெண் ஜனாதிபதி ஆகிறேன். இது எனது வெற்றி மட்டுமல்ல. நம் அனைவருடைய வெற்றியாகும். தாய்மார்களுக்கான வெற்றி. இதன் மூலம் மெக்சிகோ ஜனநாயக நாடு என்பதை நாம் நிரூபித்துள்ளோம்" என கிளாடியா ஷீன்பாம் தனது வெற்றி உரையில் தெரிவித்தார்.




கிழக்கு மாகாணக் கூடைப்பந்தாட்டம்:

## சம்பியனான திருகோணமலை

■ கதிரவன்

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்டங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் திருகோணமலை சம்பியனானது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அணிகளும் பங்கேற்ற இத்தொடரில், மட்டக்களப்பு வெபெர் உள்ளக மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்ற இறுதிப் போட்டியில் 77-76 என்ற புள்ளிகள் கணக்கில் மட்டக்களப்பை வென்றே திருகோணமலை சம்பியனானது.



இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட்களுக்கான

## மேற்கிந்தியத் தீவுகளின் குழாமில் ஹோல்டர், சியல்ஸ்

இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் போட்டிகளுக்கான மேற்கிந்தியத் தீவுகளின் குழாமில் ஜேஸன் ஹோல்டர், ஜேடன் சியல்ஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் இறுதியாக விளையாடிய டெஸ்ட் தொடரான அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடரின்போது ஐக்கிய அரபு அமீரக இருபதுக்கு 20 தொடரில் பங்கேற்றதன் காரணமாக ஹோல்டரும், காயம் காரணமாக சியல்ஸும் பங்கேற்றிருக்கவில்லை.

இந்நிலையில் இக்குழாமில் டிட்டின்னேரியன் சந்திரபோல் இடம்பெற்றிருக்கவில்லை.

குழாம்: கிறேய்க் பிறத்வெய்ட் (அணித்தலைவர்), அலிக் அதனஸே, ஜோஷுவா டா சில்வா (விக்கெட் காப்பாளர்), ஜேஸன் ஹோல்டர், கவெம் ஹொட்ஜ், டெவின் இம்லாச், அல்ஸாரி ஜோசப் (உப அணித்தலைவர்), ஷாமர் ஜோசப், மிகைல் லூயிஸ், ஸஷரி மக்கஸ்கி, கேர்க் மக்கென்ஸி, குடகேஷ் மோட்டி, கேமார் றோச், ஜேடன் சியல்ஸ், கெவின் சின்கிளேயர்

## சமநிலையில் இத்தாலி - துருக்கி போட்டி

இத்தாலியில் புதன்கிழமை (05) நடைபெற்ற சிநேகபூர்வப் போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் துருக்கி சமப்படுத்தியிருந்தது.

இப்போட்டியில் காயம் காரணமாக இத்தாலியின் மத்தியகளவீரர் நிக்கொலோ பரெல்லா பங்குபற்றியிருக்கவில்லை.






பிரெஞ்சுப் பகிரங்கத் தொடரிலிருந்து

## வாபஸ் பெற்ற ஜோக்கோவிச்

பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து, முழங்கால் காயமொன்றால் தனது காலிறுதிப் போட்டிக்கு முன்பாக நடப்பு சம்பியன் நொவக் ஜோக்கோவிச் வாபஸ் பெற்றுள்ளார்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்ற உலகின் 10ஆம் நிலை வீரரான கிறிகர் டிமிட்ரோவ்வுடனான காலிறுதிப் போட்டியில் 6-2, 6-4, 7-6 (7-3) என்ற நேர் செட்களில் வென்ற இரண்டாம் நிலை வீரரான ஜனிக் சின்னர் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

இதேவேளை தனது காலிறுதிப் போட்டியில் ஆறாம் நிலை வீராங்கனையான மார்கெட்டா வொன்ட்ரௌசோவாவை 6-0, 6-2 என்ற நேர் செட்களில் வென்ற நடப்புச் சம்பியனான இகா ஸ்வியாடெக் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

தவிர, ஒன்பதாம் நிலை வீராங்கனையான ஒன்ஸ் ஜபெயுரை தனது காலிறுதிப் போட்டியில் எதிர்கொண்ட மூன்றாம்நிலஇ வீராங்கனையான கொகோ கௌஃப், 4-6, 6-2, 6-3 என்ற செட்களில் வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்

## நேபாளத்தை வென்ற நெதர்லாந்து




சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் டலாஸில் செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்ற நேபாளத்துடனான குழு டி போட்டியில் நெதர்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நெதர்லாந்து

நேபாளம்: 106/10 (19.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: றோஹித் பௌடெல் 35 (37) ஓட்டங்கள். பந்துவீச்சு: பந்துவீச்சு: லோகான் வான் பீக் 3/18 [3.2], டிம் பிறிங்கிள் 3/20 [4], போல் வான் மீக்கரன் 2/19 [4], பஸ் டீ லீட் 2/22 [4])

நெதர்லாந்து: 109/4 (18.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: மக்ஸ் ஓ டௌட் ஆ.இ 54 (48) ஓட்டங்கள். பந்துவீச்சு: திபெந்ர சிங் ஐரீ 1/6 [2], சோம்பால் கமி 1/18 [4], அபினாஷ் பொஹறா 1/29 [3.4], கரன் கே.சி 0/17 [3] சகர் தகல் 0/21 [4])

போட்டியின் நாயகன்: டிம் பிறிங்கிள் ஆவார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 06 , ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.